பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 31 புதன்கிழமை 16.08.2023 கதிர் 278

# மாகாண ஆலோசனை சபைகள் செப்டெம்பர் 1 முதல் இயங்கும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(ந.லோகதயாளன்.)

மாகாணசபைகளுக்கானநிபுணத்துவ மற்றும் ஆலோசனைக் குழுக்கள் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் செயற்படத் தொடங்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான க.வி.விக்னேஸ்வரனிடம் அவர் இந்தத் தகவலைத் தெரியப்படுத்தியுள்ளார். அதனை விக்னேஸ்வரன் காலைக்கதிர் பத்திரிகையிடம் உறுதிப்படுத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்றைய தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார். ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது. இதன்போதே மேற்படி உத்தரவாதத்தினை ஜனாதபதி நாடாளுமன்ற உறுப்பினர் ☞2

# இனி இது ரகசியம் அல்ல!

நடிகர் சூரியாவினுடைய 'தானா சேர்ந்த கூட்டம்' திரைப்படத்தில் ஒரு பாடல் வரும். அரசியல்வாதிகளைக் குறிப்பிட்டு வரும் அந்தப் பாடலில் ''இவங்கள எல்லாம் பாத்தாலே

விரட்டி விரட்டி அடிக்க தோணுது, வந்து விரட்டி விரட்டி வெளுக்கத் தோணுது, அதிகார திமிர பணக்கார பவர, தூக்கி போட்டு மிதிக்க தோணுது....

ஹேய் தள்ளிதான் தூக்கணும், தண்ணிய கட்டணும், ஓடஓட விட்டு முட்டிய பேக்கணும், குற்றத்தை செஞ்சதா டக்குனு கேக்கணும், இல்லாதவன் வலி என்னனு காட்டணும்....

விரட்டி விரட்டி புரட்டி புரட்டி, உன்ன விரட்டி விரட்டி வெளுக்க தோணுது, அதிகார திமிர பணக்கார பவர தூக்கி போட்டு மிதிக்கத் தோணுது...'' என்று வரிகள் வரும்.

சரியா ஒரு வருடத்திற்கு முன்னர் காலி முகத் திடலில் தொடங்கி காலி வரைக்கும் பொது ஜன பெரமுனவினரின் நிலை இப்படித்தான் இருந்தது. மக்கள் அவர்களை விரட்டி விரட்டி வெளுத்துத் தள்ளினர், தண்ணிலும் தள்ளிவிட்டனர். இன்னும் ஒருபடி மேலே போய் ஆடைகளை உருவி உதைத்தனர். அதனால் ஏற்பட்ட சாவுப் பயத்தில் இருந்து அந்தக் கட்சியினர் வெளியே வரவே நீண்ட நாட்களாகின. ☞2

# யுனானில் பிரதமர்

நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணமாகச் சீனா சென்றுள்ள பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான குழுவினர் நேற்றைய தினம் சீனாவின் யுனான் மாகாணத்தைச் சென்றடைந்துள்ளனர்.

இது தொடர்பில் பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவித்துள்ளதாவது:

யுனானின் குன்மிங் விமானநிலையத்தை சென்றடைந்த பிரதமருக்கு மக்கள் சீனக் குடியரசின் யுனான் மாகாணக் குழுவின் துணைத் தலைவர் ஜாவோ ஜின், ☞2

# மக்கள் சக்தியின் ஆட்சியில் 13 அமுல்ப்படுத்தப்படும்

## சஜித் பிரேமதாச இப்போதே தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் ஒன்றித்த நாட்டுக்குள் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அதிகாரப் பரவலாக்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மகாசங்கத்தினரின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் சிறந்த முறையில் பெற்றுக்கொண்டு பாதகமான காரணிகளை நீக்கி சாதகமான காரணிகளுடன் சமய சேவை, சமூக சேவை மற்றும் முற்போக்கு அரசியல் பயணத்தை முன்னெடுக்கும் சக்தியாக ஐக்கிய மக்கள் சக்தி திகழ்வதாகவும் அவர் தெரிவித்தார்.

விழுமியமிக்க சமூகத்துக்கான பிக்குகள் ஆலோசனை பேரவையின் இரண்டாம் கட்டம் நேற்று காலி மாவட்டத்தை இலக்காக் கொண்டு காலி நகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாச அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் பத்தாயிரத்து எண்பத்தி ஒன்பதுக்கும் மேற்பட்ட ☞2

# நைனாமடுச் சீனித் தொழிற்சாலை செல்வம் எம்பியின் கோரிக்கையே

## மடுவில் உண்மையை உளறினார் ஜனாதிபதி

(ந.லோகதயாளன்.)

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் வேண்டுகோளுக்கு அமையவே வவுனியாவில் சீனித் தொழிற்சாலையொன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

மன்னார் மடு மாதா ஆலயத்தின் வருடாந்த ஆவணி உற்சவம் நேற்றைறு வெகு விமரிசையாக இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் நெடுங்கேணியை அண்டிய நயினாமடுக் கிராமத்தில், மத்திய வகுப்புத் திட்டத்தில் மக்களிற்கு வழங்கிய நிலத்தில் 500 ஏக்கர் பகுதியில் சீனித் தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளதோடு அத் தொழிற்சாலையின் செயற்பாட்டிற்கென வவுனியா வடக்கில் 30 ஆயிரம் கெக்டேயர் நிலத்தில் கரும்புச் செய்கை மேற்கொள்ளவும் திட்டம் முன்மொழியப்பட்டு அதற்கான அமைச்சரவை அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் பின்னணியில் ரெலோ கட்சியும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வமும் கட்சியின் பேச்சாளரான சுரேன் குருசாமியும் உள்ளனர் என்று காலைக் கதிர் செய்திகளை வெளியிட்டிருந்தது. அதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இந்தத் திட்டத்திற்கும் ரெலோவுக்கும் எந்தத் ☞2

# அமைச்சர்கள் மனுஷ, ஹரின் உயர் நீதிமன்றில் மனு தாக்கல்

## எம்.பி. பதவியைக் காப்பாற்றுவதற்காக

அமைச்சர்களான மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

கட்சி உறுப்புரிமையை இடைநிறுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நீக்க ஐக்கிய மக்கள் சக்தி எடுத்துள்ள தீர்மானத்தை இரத்து செய்யுமாறு உத்தரவிடக் கோரி குறித்த இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை அவர்கள் தாக்கல் செய்துள்ளனர்.

மனுவின் பிரதிவாதிகளாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட மத்திய குழுவின் அங்கத்தவர்களின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சர்களான மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோரை கட்சியில் இருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு கடந்த ஜூலை மாதம் 18 ஆம் திகதி தீர்மானம் மேற்கொண்டது.

முன்னதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களாக இருந்த அவர்கள் 2022 ஜூலை 22 ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க புதிய அமைச்சரவையை ☞2

# சுகாதார சேவை ஆட்சேர்ப்புக்கு அடுத்தாண்டு நிதி கிடையாது

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

2024 ஆம் ஆண்டில் அரசசேவைக்கான ஆட்சேர்ப்புகளுக்கு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட மாட்டாது என நிதி அமைசசு அறிவித்துள்ளது.

அமைச்சுகளுக்கு நேற்றையதினம் விடுத்துள்ள வழிகாட்டல் அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2024 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை அமைச்சுக்கள் இறுக்கமாக பின்பற்றுதல் அவசியமாகின்றது.

அத்தோடு, அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அரசசேவைக்கான ஆட்சேர்ப்புகளுக்கு நிதி ஒதுக்கப்பட மாட்டாது என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

மேலும், அடுத்த ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டில் புதிய நிர்மாணப் பணிகளும் உள்ளடக்கப்படவில்லை. அரச நிறுவனங்களுக்காக வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் 2024 ஆம் ஆண்டிலும் அமுலில் இருக்கும் என்றுள்ளது.

# பாரம்பரிய ஆயுள்வேத வைத்தியர்கள் இலகுவாகப் பதிவதற்கு நடவடிக்கை

பாரம்பரிய ஆயுள்வேத வைத்தியர்களைப் பதிய இலகுவான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று சுதேசவைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சுதேசவைத்தியத்துறை மறுமலர்ச்சி அடைந்து வருகிறது. இதனை மேம்படுத்த நாம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். இதற்கமைய சுதேச வைத்தியத் துறையை, ஏற்றுமதி வருமானத்தைப் பெறும், அந்நியச் செலாவணியை ஈட்டும் வர்த்தகப் பெறுமதியுடன் கூடிய தொழில்துறையாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுதேச வைத்தியத்துறை என்பது எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பெருமளவில் பங்களிப்புச் செய்யக் கூடிய ஒரு துறையாகும்.

செப்டெம்பர் 08, 09, 10 பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சுதேசவைத்தியத் துறைசார் சர்வதேச மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கு இணையாக கல்வி மற்றும் விற்பனைக் கண்காட்சியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பாடசாலை மாணவர்களின் சுகாதாரம் மற்றும் உளப்பாங்குமாற்றம் போன்றவற்றை சீர்செய்வதற்கான வழிகாட்டல்களை வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சுகாதார அடிப்படையில் அன்றாடப் பணிகளை முன்னெடுப்பதற்கான ஆலோசனைகளை வழங்கவும், போதைப் பொருள் பாவனையில் இருந்து பாடசாலை மாணவர்களைப் பாதுகாக்கவும் இத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. ☞2

# மீண்டும் ஒரு போர் வேண்டாம் பாப்பரசரின் பிரதிநிதி வலியுறுத்து



உடல் ரீதியான உணர்வு ரீதியான வடுக்களை விட்டுச் சென்ற 26 வருட உள்நாட்டு போரின் தாக்கங்களை நாம் மறந்துவிட முடியாது. மீண்டும் ஒரு போர் வேண்டாம், என்று பரிசுத்த பாப்பரசரின் பிரதிநிதி பேராயர் பிறைன் உடைக்குவே ஆண்டகை தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான ஜனாதிபதியின் சந்திப்பு உள்ளிட்ட முயற்சிகள் ஊடாக நல்லிணக்கத்தை எட்டுவதற்கு எடுக்கும் முயற்சிகள் பாராட்டத்தக்கவையென்றும் அவர் குறிப்பிட்டார்.

மன்னார் மடுமாதாவின் வருடாந்த திருவிழாவில் பிரசங்கம் செய்யும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இத்திருப்பலியில் கலந்துகொள்ளும் சகோதர சகோதரிகளே, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பெயரால் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். திருத்தந்தை உங்கள் நாட்டை அன்பு செய்கிறார். 2015 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் திகதி திருத்தந்தை இந்த நாட்டிற்கும் இத்திருத் தலத்துக்கும் மேற்கொண்ட திருத்தூது பயணத்தை அவர் மிகவும் பாராட்டுகின்றார். ☞2

# 73 வகையான மருந்துகள் தரச் சோதனையில் தோல்வி

நடப்பாண்டின் ஜூலை 31 வரையிலான காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளில் 73 வகையானவை, தரப்பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவு விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மருந்துகளுக்கான தர சோதனையில் தோல்வியடைந்த மருந்துகளில் 45 மருந்துவகைகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டவையாகும் 17 மருந்துகள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டவையாக உள்ளதோடு ஏனையவை பாகிஸ்தான், ஜப்பான் தபங்களாதேஷ் போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவையாகும்.

மருந்துதரப் பரிசோதனையில் தோல்வியடைந்ததாகக் கண்டறியப்பட்ட மருந்து வகைகளில் சில திரும்பப் பெறப்பட்டுள்ளன.

அவற்றைத்தவிர, மொத்தம் 35 ஃப்ளுக்ளோக்சசிலின் குளிசைகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. இது 2017 ஆம் ஆண்டிலிருந்து இது வரை அதிகபட்ச எண்ணிக்கையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட மருந்து இரத்மலானையில் உள்ள அரசமருந்து உற்பத்திகூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அத்துடன், 2017 முதல் மொத்தம் 585 தரக் குறைபாடுகள் கண்டறியப்பட்டன. இதுபோன்ற வழக்குகளில் அதிகபட்சமாக 96 வழக்குகள் 2019 இல் பதிவாகியுள்ளதோடு 2022 இல் 86 மருந்துகள் தரசோதனையில் தோல்வியடைந்திருந்தன.

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

இப்போது ''குளிர் விட்டுப் போனது" போல பயம்விட்டுப் போய்விட்டது. மீண்டும் பழையது பேசிக்கொண்டு பழைய அரசியலையே மீண்டும்தொடங்கிவிட்டனர் அவர்கள்.

சிங்கள மக்கள் மத்தியில் தமது தலைகளையே காட்டப் பயந்தவர்கள் இன்று 13ஐ இப்போது மக்கள் கேட்கவில்லை என்று மக்கள் சார்பில் கருத்துச்சொல்லத் துணிந்துவிட்டனர். தேர்தல்கள் வரப்போகும் நிலையில் கட்சியை மறுசீரமைத்துத் தயார்ப்படுத்தும் அவர்களின் பணிகள் துரிதமாகி இருக்கின்றன. அது பற்றி ஏற்கனவே சில தடவைகள் இங்கு நான் குறிப்பிட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

நாமல் ராஜபக்ஷ தலைமையில்கிராமங்கள்தோறும் கட்சிக் கிளைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு கட்சிக்கு புத்துயிரளிக்கும் பணிகள் விரைவுபடுத்தப்பட்டிருந்தன. அதன் அடுத்த கட்டமாக வருடாந்தம் நடத்தப்படும் மகிந்த ராஜபக்ஷ கிரிக்கெட் போட்டி இந்த ஆண்டும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் நுவரெலியாவில் நடத்தப்பட்டது.

இந்தப் போட்டியின்போது கட்சியின் கறுப்பு ஆடுகள் சில சிக்கிக்கொண்டன என்பதுதான் கட்சி மட்டத்தில் இப்போதுள்ள தீவிரமான பேச்சு. நுவரெலியாகிரிக்கெட் போட்டிக்கு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. வருடாந்த விளையாட்டு என்ற ரீதியில் இருந்தாலும் கட்சியின் இன்றைய நிலையில் தமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து கட்சியைப்பலப்படுத்துவதுதான் உண்மையான நோக்கம். அதனால் தவறாமல் எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது.

ஆனால், கட்சியின் பலம்வாய்ந்த அமைச்சர் ஒருவரும்மேலும்இருநாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தப் போட்டிக்கு ஏனைய நாடாளுமன்றஉறுப்பினர்கள் செல்வதைத் தடுத்தனர் என்பதுபோட்டிநடந்தஅன்றே தலைமைக்குப் போட்டுக் கொடுக்கப்பட்டுவிட்டது.

இந்த நிகழ்வில் பங்கேற்க வேண்டாம்எனபோட்டிக்குச் சில தினங்களுக்கு முன்னர் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பலம் வாய்ந்த அமைச்சரவை அமைச்சர் ஒருவரும் இரண்டுநாடாளுமன்றஉறுப்பினர்களும் பேசியுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களைநுவரெலியாவிற்கு அழைத்துச் செல்வதற்காக பஸ் வந்தபோதும் அதில் ஏற வேண்டாம்எனஅவர்களால் அலைபேசி அழைப்பின் மூலம் கேட்கப்பட்டதாம். ஆனால் பஸ்ஸில் ஏறியவர்கள் பயணத்தின்போதே இது தொடர்பில் ஆளுக்காள் காரசாரமாக விவாதித்துள்ளனர். நுவரெலியா போய்ச் சேர்ந்ததுமே கட்சியின் பிரதான அமைப்பாளரிடமும் விலாவாரியாக விவரங்களை ஒப்பித்துவிட்டனர்.

பத்தரமுல்லையில் உள்ள மொட்டுக் கட்சியின் தலைமையகம் இது தொடர்பில் மேற்கொண்ட விசாரணைகளில்தகவல்உண்மை என்பதை கண்டறிந்திருக்கிறது.

இதன்படி எதிர்காலத்தில் மொட்டின்நட்புறவுசந்திப்பை சீர்குலைக்கச்செயற்பட்டஇந்த மூன்று பேரையும் பற்றிய உண்மைகளை கட்சிக்கும் நாட்டுக்கும் வெளிப்படுத்த மொட்டின் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களைநுவரெலியாவுக்குச் செல்லவேண்டாம் என்று தடுத்தபோதும் சுமார் 60 பேர் அங்கு சென்றுள்ளனர் என்று தெரிகிறது. மக்களால் விரட்டி விரட்டி வெளுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டவர்கள் இன்று பந்துகளை விரட்டி விரட்டி வெளுத்து தமது ஒற்றுமையைப் பறைசாற்றிக் கொள்கிறார்கள். இதைத்தான் கலி காலம் என்கிறார்களோ வாசகர்களே!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.வி.விக்னேஸ்வரனுக்கு வழங்கியுள்ளார்.

மாகாண சபைகளைப் பலப்படுத்தும் வகையில், கொழும்பு மத்திய அரசால் மாகாணங்களிடம் இருந்து மீளப்பெறப்பட்ட அதிகாரங்களைத் திருப்பி ஒப்படைக்கவும் மேலும் சில அதிகாரங்களை வழங்கவும் என மாகாண சபைகளுக்கு ஆலோசனைச் சபைகளை அமைக்கும் யோசனை முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள்செயலாளர்கலாநிதி விக்னேஸ்வரன்ஆகியோரால் ஏற்கனவே ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருந்தன.

9மாகாணங்களின்ஆளுநர்களுக்கும் ஆலோசனைகளை வழங்கும் வகையில் நியமிக்கப்படவுள்ள ஆலோசனைச் சபைகளில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் உள்வாங்கப்படுவர். அதே போன்று பிரதமர் தினேஸ் குணவர்த்தனதலைமையில் நிபுணத்துவ சபை ஒன்றும் நியமிக்கப்படவுள்ளது.

## பாரம்பரிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார்63வருடங்களைக் கடந்துள்ள சுதேச வைத்திய சட்டத்தை மறுசீரமைக்கும் பணிகள்உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைகளுக்கமைய முன்னெடுக்கப்படுகிறது. சுதேசவைத்தியர்களின்பிரச்சினைகளை அவர்களின் பிரதேசங்களுக்கே சென்று தீர்த்து வைக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்யாமல், பாரம்பரியமாகவும் மற்றும் பரம்பரை அறிவு, அனுபவத்தின் அடிப்படையிலும் சுதேச வைத்திய சிகிச்சைகளை செய்து வரும் சுதேச வைத்தியர்களை, ஆயுர்வேத வைத்தியசபையில்பதிவுசெய்வதற்கான பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் எழுத்துமூலப்பரீட்சைகளுக்கு தோற்றுவதில் நடைமுறை ரீதியிலான பல்வேறு சிக்கல்கள் ஏற்படுவதால், குறித்த பிரதேசங்களுக்குச் சென்று அவர்கள் தொடர்பில் விரிவான தகவல்களைப் பெற்று, முறையான பரிசீலனைகளுக்குப் பின்னர் அவர்களைப் பரீட்சையின்றியும்45வயதுக்குமேற்பட்டவர்களுக்கு வாய்மூலப் பரீட்சையுடனும் பதிவுகளை முன்னெடுக்கத்தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளது.

இவர்கள் வைத்தியர்களாக மக்களுக்கு சிகிச்சை அளிப்பவர்கள் என்பதால் இவ்வாறானஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணிப்புடன் அவர்களுக்கு, பாரம்பரிய சுதேச வைத்தியர்களாக அந்த கௌரவத்தை பெற்றுக் கொடுக்கவும், அவர்களைப் பதிவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நிலவிய பொருளாதார நெருக்கடியினால்சுதேசவைத்தியத் துறையில்பயன்படுத்தப்படும் மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான மூலம்பொருட்களை இறக்குமதி செய்வதில் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தது. தற்போது உள்நாட்டில்விளையக்கூடிய, மருத்துவ மூலப்பொருட்களாக பயன்படுத்தப்படும் பயிர்களைஎமதுநாட்டிலேயே பயிரிட நடவடிக்கை எடுத்து, இறக்குமதியை கட்டுப்படுத்தியுள்ளோம்.

இதுவரை காலமும் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டிருந்தஆயுர்வேத கூட்டுத்தாபனம்முறையான முகாமைத்துவத்தின் மூலம் தற்போது இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளதோடு ஏற்றுமதித் துறையில் பிரவேசிக்க திட்டமிட்டுள்ளது.

அத்துடன், வெளிநாடுகளில் வசித்து வரும் இலங்கையர்களுக்கு ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் முகவர்களாக இணையும் சந்தர்ப்பம் உள்ளதோடு அதன் மூலம் எமது நாட்டு ஆயுர்வேத உற்பத்திகளை சர்வதேச அளவில் சந்தைப்படுத்தும் வாய்ப்புகள் விரிவுபடுத்தப்படும். இதன் ஊடாக இலங்கையின் ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கும்.

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் ஆயுர்வேத சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டி வருவதோடு அவர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கும் வகையில் துறைசார் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறுஎன்விகியூ(NVQ-4) சான்றிதழுடன் ஆயுர்வேத சிகிச்சைகளை வழங்கக் கூடியவர்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது - என்றார்.

## யுனானில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூத்த அதிகாரிகள் மற்றும் சீனாவுக்கான இலங்கை தூதரகத்தின் விசேட அதிகாரி கே.கே.யோகநாதன் ஆகியோர்வரவேற்பளிதனர்.

பிரதமருடன் இராஜாங்க அமைச்சர்களான தாரக பாலசூரிய, ஜானக வக்கும்புர மற்றும் கனக ஹேரத், நாடாளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன மற்றும்பிரதமரின்செயலாளர் அனுர திஸாநாயக்க ஆகியோரும் சென்றுள்ளனர்.

சீன வர்த்தக அமைச்சு மற்றும் யுனான் மாகாண அரசு இணைந்து நடத்தும் 7ஆவது சீனா-தெற்காசியா எக்ஸ்போ மற்றும் 27ஆவது சீனா குன்மிங் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கண்காட்சி ஆகியவற்றில் பிரதமர் தலைமை விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

'பொது வளர்ச்சிக்கான ஒற்றுமை மற்றும் ஒருங்கிணைப்பு' என்ற கருப்பொருளில் ஒகஸ்ட் 16 முதல் 20 வரை சீனாவின் குன்மிங்கில் இந்த நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

எக்ஸ்போ அமைப்பாளர்களின் கருத்துபடி, மொத்தம் 60 நாடுகள் இந்தப் பிரம்மாண்டமான வர்த்தக காட்சியில் பங்கேற்கின்றன. அவை அனைத்து தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள்.

7ஆவது சீனா-தெற்காசியா எக்ஸ்போ சீனாவிற்கும் தெற்காசிய நாடுகளுக்கும் இடையிலான மிக முக்கியமான பொருளாதார மற்றும் வர்த்தக பரிமாற்ற நிகழ்வாக இருக்குமென கருதப்படுகிறது.

இருதரப்பு உறவுகள், பொருளாதார ஒத்துழைப்பு, வர்த்தகம் மற்றும் முதலீடுகள் குறித்து சீனத்தலைவர்களுடன் பிரதமர் கலந்துரையாட உள்ளாரெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விகாரைகளும், பத்தாயிரத்து பதினெட்டுக்கும் மேற்பட்ட தஹம் அறநெறிப் பாடசாலைகளும் 800இக்கும் மேற்பட்ட பிரிவினாக்களும் உள்ளன., ஒவ்வொரு மதஸ்தான நிறுவனங்களின் ஆற்றலை சமய மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மாற்றும் வகையில் செயல்படுத்த ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கும்.

கடந்த கால ஆட்சியாளர்களின் பணியாற்றுகைகளைப் பார்த்து ஐக்கிய மக்கள் சக்தியின் பயணத்தை மதிப்பிட வேண்டாமெனமதிப்புக்குரிய மகாசங்கத்தினரிடம் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். தசராஜதர்மகொள்கைகளை மையப்படுத்தி அரசை நிர்வகிப்பதே எமது இலக்காகும்.

நாட்டிலுள்ள ஒவ்வொரு வழிபாட்டுத் தலங்களிலும் சமய அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்படும்.,சமய வழிபாட்டுத் தலங்களுக்கு சமய நிதியமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு சன்மார்க்க சமுதாயத்தை உருவாக்க உதவுவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

இளைஞர்களுக்கான மையமாகவும், மத நல்லிணக்கத்திற்கான இடமாகவும், மேம்பட்ட படித்த நவீன தலைமுறையின் இடமாகவும், தொழில்நுட்ப ஆற்றல் வாய்ந்ததலைமுறையினரின் மையமாகவும் மத வழிபாட்டுத் தலங்களை உருவாக்க வேண்டும்.

நவீனத்துவப் பார்வையின்மூலம்,அனைத்துப் விடயப் பரப்புகளுக்குமான கொள்கை வகுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, கொள்கை வகுப்பாக்கங்களை தயாரிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.பௌத்தஅறநெறிக் கல்வியை மேம்படுத்த விசேட வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

விகாரைகள் எதிர்நோக்கும்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு வேலைத் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. மத வழிபாட்டுத் தலங்களில் சூரிய மின்சக்தித் திட்டத்தை வெறுமனே கூறாமல் யதார்த்தமாக நடைமுறைப்படுத் துவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

ஒன்றித்த நாட்டுக்குள் ஐக்கியமக்கள்சக்திஆட்சியில் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அதிகாரப் பரவலாக்களை நடைமுறைப்படுத்தஎதிர்பார்க்கின்றோம், ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேண தேசிய ஒற்றைமை மிகவும் அவசியமாகும். நாட்டின் அனைத்து பிரஜைகளும் சமமாக கருதப்பட்டு ஒவ்வொரு சமூகத்திற்கும் சுயமரியாதையுடன்வாழும்உரிமை வழங்கப்பட வேண்டும்.

ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேண தேசிய ஒற்றுமை மிகவும் அவசியம் என்றும், நாட்டின் அனைத்து பிரஜைகளும் சமமாககருதப்பட்டுஒவ்வொரு சமூகத்திற்கும் சுயமரியாதையுடன்வாழும்உரிமைவழங்கப்பட வேண்டும். தற்போது இவை அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளன -என்றார்.

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்றைய நாளில் அவருக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட மடு மாத திருச்சொரூபத்தை அவர் இன்று வரை போற்றுகின்றார். உலகம் போற்றும் இத்திருத்தலத்தில் அன்று அவர் ஆற்றிய உரையை நோக்கி தற்போது எனது சிந்தனைகள் செல்கிறது.

உடல்ரீதியானஉணர்வு ரீதியான வடுக்களை விட்டுச் சென்ற 26 வருடங்கள் நீடித்துச் சென்ற உள்நாட்டு போரின் தாக்கங்களை நாம் மறந்து விட முடியாது. பல தடவைகளில் இந்த போரைப் பற்றி நான் கேள்விப்பட்டு இருக்கின்றேன். வாசித்தும் இருக்கின்றேன்.

எனினும் 2 வாரங்களுக்கு முன்னர் யாழ். மறை மாவட்டத்திற்கு நான் மேற்கொண்டிருந்த மீட்புப் பணி விஜயத்தின் போது மக்கள் மீதும், கைவிடப்பட்ட வீடுகள் மீதும் உடமைகள் மீதும் போரின் தாக்கம் எவ்வாறு இருந்தது என்பதை இன்னும் ஆழமாக பார்ப்பதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

மீண்டும் ஒரு போர் வேண்டாம். இன,மத, மொழி,சாதி கருத்து போன்ற வேற்றுமைகளுக்கு அப்பால் அன்பும், அமைதியும் சகிப்புத் தன்மையும்நிலைபெறுவதாக இருக்க வேண்டும். வெறுப்பும்,விரோதமும் வேண்டாம். ஏனெனில் சமாதானம் என்பது ஓர் இல்லாத நிலை அன்று. இது நல்லிணக்கத்திற்கான நேரம். வடக்குமற்றும்கிழக்கு மாகாணங்களுக்கான பயணங்கள். வடக்குகிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான ஜனாதிபதியுடன் சந்திப்பு போன்ற முயற்சிகள் ஊடாக நல்லிணக்கத்தை எட்டுவதற்கு அதிகாரிகள் எடுக்கும் முயற்சிகளைநாம்பாராட்டுகிறோம்.

அதேவேளை ஒரு வாரத்திற்கு முன்னர் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் தெளிவாக குறிப்பிட்டதுபோல அனைவரும் நன்கு அறிந்த குழப்பமான விடயங்களை போதுமான அளவில் தீர்த்து வைக்கும் வகையில் இந்த செயன்முறைகள் அமையும் என நாங்கள் நம்புகிறோம்.

மூன்றுவருடங்களுக்கு முன் நான் இலங்கைக்கு வந்த போது இந்த நாட்டின் பல பாகங்களுக்கும் நான் பயணம் செய்தேன். இலங்கைமக்கள்பொதுவாக நல்லவர்கள். சகிப்புத்தன்மை கொண்டவர்கள். குறைவாக உள்ள சிறு குழுவினர் உங்கள் மீது எதிர் மறையாக செல்வாக்கு செலுத்தவோ, உங்களைதிசைதிருப்பவோ அனுமதிக்க வேண்டாம்.

பல்வேறு சமயங்களை சார்ந்தசமையத்தலைவர்கள் அன்பையும், சகோதரத்துவத்தையும், நோக்கிய சரியான கொள்கையை நோக்கி மக்களை வழிநடத்துவதில் முன்னனி பங்கு வகிக்க வேண்டும். எந்த ஒரு சமையத்தலைவரும் தமக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள்,மதிப்பு ,சலுகைகள் போன்றவற்றைபயன்படுத்தி மற்றைய சமையங்களை இழிவுபடுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

நாம்முன்னுதாரணமாக திகழ்ந்து வழிநடத்த வேண்டும். நாம்ஒன்றினைப்பின் முகவர்களாக திகழ வேண்டுமேதவிர பிரிவினை வாதத்தின் முகவர்களாக அல்ல - என்றார்.

## நைனாமடுச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பும் இல்லை என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே நேற்றைய தினம் மடுவிற்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காநாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் வேண்டுகோளுக்கு அமையவே வவுனியாவில் சீனித் தொழிற்சாலை ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டு அதற்கான அமைச்சரவை பெறப்பட்டது என்ற உண்மையைப் பகிரங்கமாகப் போட்டுடைத்தார்.

## அமைச்சர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமித்த போது அமைச்சுப்பதவிகளைப் பெற்று அவருடன் இணைந்து கொண்டனர்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# தமிழர்களுக்குப் பல வீரவரலாறுகள் உள்ளன பிரபா எத்தகைய வீரன் என்பதை உலகறியும்

## மேர்வினின் கருத்து வேடிக்கையானது என்கிறார் ரவிகரன்



தமிழர்களுக்கென பல தனித்துவமான வீரவரலாறுகள் உள்ளனவெனவும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் எத்தகைய வீரன் என்பதை இந்த முழு உலகும் அறியும் எனவும் முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

மேர்வின் சில்வா தமிழர்களின் தலைகளை களனிக்கு எடுத்துச் செல்வதாக கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றமை வேடிக்கையாக இருப்பதாகவும், முதலில் தமிழர்களின் வீர வரலாறுகள் எத்தகையது என்பதை மேர்வின் சில்வா மற்றும் சரத் வீரசேகர போன்றவர்கள் அறிந்துகொள்ளவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

செஞ்சோலைப் படுகொலையின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

இலங்கை அரசினுடைய கோர முகம் வெளிப்பட்ட நாள் இன்றாகும். அப்பாவிப் பாடசாலை மாணவர்கள் மீது இந்த அரசு படுகொலையைக் கட்டவிழ்த்துவிட்ட நாள் இன்றாகும்.

குண்டுகளால் பாடசாலை மாணவர்களது வெண்ணிறச் சீருடை குருதியால் நனைந்து சிவப்பாகியதுடன், மாணவர்களது உடல்கள் துண்டுதுண்டாக்கப்பட்டன.

இவ்வாறான கொடூரமான ஆட்சியாளர்கள் உள்ள நாட்டில்தான் நாம் வாழ்கின்றோம்.

கடந்த 2009 இற்குப் பிற்பாடு நிலப்பறிப்பு, மதத்திணிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களின் ஊடாக இன அழிப்புச் செயற்பாடுகளைத் தற்போதும் மேற்கொண்டு வருகின்றார்கள்.

இந் நிலையில் தமிழர்களுடைய தலைகளைக் களனிக்கு கொண்டு செல்லப்போவதாக மேர்வின் சில்வா அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அதேபோல் சரத்வீரசேகர என்பவருடைய சர்ச்சைக்குரிய பல கருத்துக்களையும் நாங்கள் காண்கின்றோம்.

இவ்வாறான கருத்துக்களை வெளியிடுபவர்கள் தமிழர்களுடைய வீர வரலாறுகள் எத்தகையது என்பதை முதலில் அறிந்து கொள்ளவேண்டும்.

அந்த வீரவரலாறுகளின் வரிசையில்வந்த தலைவர் பிரபாகரன், எத்தகைய தலைசிறந்த வீரர் என்பதை இந்தமுழுஉலகமும்அறியும்.

இவ்வாறு எமது வீர வரலாறுகள் இருக்கும்போது எமது தலைகளை களனிக்கு எடுத்து செல்லப் போவதாக கருத்துக்களை வெளியிடுகின்றமை மிகவும் வேடிக்கையானது.

இவ்வாறான அரக்க குணமுடையவர்களை வைத்தே இந்த அரசு ஆட்சி நடத்துகின்றது.

இந்த மேர்வின் சில்வா என்பவர் கடந்த 2015 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ச ஆட்சியில் அமைச்சராக இருந்தவராவார்.

அதேபோலசரத்வீரசேகர இந்த ஆட்சியில் தேசியப் பட்டியல் மூலம் தெரிவுசெய்யப்பட்டு, முன்பு அமைச்சராகவும் இருந்தவராவார்.

அனைத்து பெரும்பாண்மையின மக்களையும் நாம் குறைகூறவில்லை. பெரும்பாண்மையினத்தைச் சேர்ந்த பல அறிஞர்கள், புத்திஜீவிகள் இருக்கின்றனர்.

இவ்வாறான கொடூர மனம்படைத்தவர்களைப் பெரும்பாண்மை மக்கள் ஓரங்கட்டவேண்டும்.

தமிழர்கள் நாங்கள், எம்மை நாமே தீர்மானிக்கக்கூடிய தீர்வையே நாம் எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறு விமானக் குண்டுத் தாக்குதலில் உயிர்நீத்த அப்பாவி மாணவர்களுக்குத் தலைசாய்த்து எனது உளப்பூர்வமான அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த அப்பாவி மாணவர்களுடைய பெற்றோர்கள் இங்கு குமுறிக் குமுறி அழுவதை இங்கே காண முடிந்தது. இந்தப் பெறறோருடைய கண்ணீருக்குஇந்தஅரசுபதில் சொல்லியே ஆகவேண்டும் - என்றார். (05)

# 'சக்வல - பிரபஞ்சம்' வேலைத் திட்டம்; 75ஆவது பஸ் சஜித்தால் அன்பளிப்பு













எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தி தலைவருமான சஜித் பிரேமதாஸவின் 'சக்வல-பிரபஞ்சம்' வேலை திட்டத்தின் கீழ் ஐக்கிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை அமைப்பாளர் எம்.ஏ.ஹஸனலியின்முயற்சியால் 75 ஆவது பஸ்ஸை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகாவித்தியாலயத்துக்கு அன்பளிப்பு செய்யும் நிகழ்வு திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்த பஸ், விளினையடி சந்தியிலிருந்து ஆரம்பித்து பழைய கல்முனை வீதி - பூமரத்துச்சந்தியினூடாக தேசியக் கல்லூரி வளாகத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் செலுத்தி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ கலந்துகொண்டு பஸ்ஸை கல்லூரி அதிபர் நஜீபா ரஹீமிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூர், சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் தலைவர் ஐ.எல்.எம்.மாஹிர், சம்மாந்துறை பிரதேசசெயலாளர் ஐ.எல்.எம். ஹனிபா சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.எம்.எம்.எஸ். உமர் மௌலானா, ஐக்கிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை அமைப்பாளர் எம்.ஏ.ஹஸனலி, உட்பட ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (05)



# வீதிப் பெயரில் சிங்களத் தவறு மன்னிப்புக் கேட்டார் நிரோஷ்



தனது பதவிக்காலத்தில் இடப்பட்ட பெயர்ப்பலகையில் சிங்கள மொழி தவறாக இடம்பெற்றமையால் அந்தப் பிழையான அர்த்தத்தால் சிங்கள சகோதரர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்குத் தானாக முன்வந்து வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் பகிரங்கமாக மன்னிப்புக்கோரியுள்ளதுடன் உரிய திருத்தத்தை மேற்கொள்ளவும் பிரதேச சபை செயலாளரிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

எம்மால் புனரமைக்கப்பட்ட கோப்பாய் பகவான் பாதைக்கான வீதியின் பெயர்ப்பலகையில் காணப்பட்ட சிங்கள மொழியில் தவறு காரணமாக அது பிழையான அர்த்தத்தை சிங்கள மொழியில் வெளிப்படுத்தியது. இது சமூக ஊடகங்களில் விமர்சிக்கப்பட்டிருந்ததுடன் சிங்கள மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட பலரும் முகப்புத்தகத்தில் கவலை தெரிவித்திருந்தனர். இதனை சமூக செயற்பாட்டாளர் விஸ்வநாதன் ஆதித்தன் எனது கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதனையடுத்து தான் சிங்கள மொழிபெயர்ப்பாளர் ஒருவர் ஊடாக விமர்சனத்தில் உண்மையுள்ளது என்பதை உறுதிப்படுத்தியுள்ளேன். எனது பதவிக்காலம் நிறைவடைந்துள்ள நிலையில் பிரதேச சபை செயலாளர் இராமலிங்கம் பகிரதனின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதுடன் பிரதேசசபை நடவடிக்கையை எடுப்பதற்கு வசதியாக முதற்கட்ட கருமமாக அங்கு காணப்பட்ட தவறான அர்த்தத்தில் காணப்பட்ட சிங்கள பதத்தை மறைத்துள்ளதுடன் இயன்ற விரைவில் குறித்த பெயர்ப் பலகை பிரதேச சபையால் மாற்றியமைக்கப்படவுள்ளது.

இந்தப் பெயர்ப்பலகை எனது பதவிக்காலத்தில் இடப்பட்டதன் அடிப்படையில் இதனால் பாதிக்கப்பட்ட சகோதர மொழி மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக நான் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கின்றேன். நாம் தமிழராக இந் நாட்டில் வரலாற்று ரீதியில் எவ்வளவு தூரம் ஒடுக்கப்பட்டது என்பதையும் ஒடுக்கப்படுகின்றது என்பதையும் நான் நன்கு அறிவேன். இன்றும் நாட்டில்தமிழ்மொழிஎந்தளவு தூரம் அரச கரும மொழிச் சட்டங்களுக்கு அமைய பரிபாலிக்கப்படவில்லை என்பதையும் எமது மொழி பல இடங்களில் தூசணமாகக் கூட அர்த்தப்படுத்தல் இடம்பெற்றுள்ளதை கண்டு அவற்றுக்கு எதிராக நான் செயற்பட்டும் இருக்கின்றேன்.

இந் நிலையில் விமர்சனங்களை முன்வைப்போரின் ஆதங்கத்தை மதிக்கின்றேன். எமது பதவிக் காலத்தில் இடப்பட்ட பகவான் பாதைக்காக பெயர்ப்பலகையில் காணப்பட்ட பதமும் தவறான சிங்கள அர்த்தப்படுத்தலுக்கே உரியது என்பதை இன்று தெரிந்து கொண்டேன். கிட்டத்தட்ட 5 மாதங்களுக்கு மேலாக பகிரங்க வெளியிலும் இந்தப் பெயர்ப்பலகை காணப்பட்டுள்ளது. இது வருந்தத்தக்கது.

இதுபற்றிய தவறு சுட்டிக்காட்டப்பட்டவுடன் அரச உத்தியோகத்தார்கள் செயற்பட்டுள்ளார்கள். எமது மொழி பயன்பாட்டுத் தவறு காரணமாக இந்த விடயத்தில் பாதிக்கப்படும் ஒவ்வொரு சிங்கள சகோதரர்களிடத்திலும் நான் மன்னிப்புக்கோருகின்றேன். இதேவேளை வடக்குக் கிழக்கிற்கு வெளியே தமிழ் மொழி அமுலாக்கம் மற்றும் தவறான அர்த்தப்படுத்தல்கள் தொடர்பிலும் உரிய நடவடிக்கை அவசியம் என்பதையும் அதற்கெதிராகப் போராடுவதற்கும் முற்போக்காளர்களை வலியுறுத்துகின்றேன். - என்றார். (05)

# மஹிந்த ராஜபக்ஷ சவால் சம்பியன்ஷிப் கிரிக்கெட்

மஹிந்த ராஜபக்ஷ சவால் சம்பியன்ஷிப் கிரிக்கட் சுற்றுப் போட்டி கடந்த சனிக் கிழமை நுவரெலியா மாநகர சபை விளையாட்டு மைதானத்தில் நாடாளு மன்ற உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் இடம் பெற்றது. வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் பிரதமருமான நாடாளு மன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இவ்வருடம் இடம்பெற்றது.

மஹிந்த ராஜபக்ஷ, நாமல்ராஜபக்ஷ, நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட, நுவரெலியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த ஹக்மான உள்ளிட்டோர் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்டனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இராஜாங்க அமைச்சர்கள் மற் றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த போட்டியில் பங்குபற்றுவதற்காக கலந்துகொண்டனர்.

இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு இடையில் இரண்டு போட்டிகள் இடம்பெற்றதுடன் இரண்டு போட்டிகளிலும் நாடாளு மன்ற உறுப்பினர்கள் அணி வெற்றிபெற்றுள்ளது.

போட்டியின் நாயகனாக நாடாளுமன்ற உறுப்பினர் கயாானும், சிறந்தகாப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி.ரத்நாயக்கவும், சிறந்த துடுப்பாட்ட வீரராக நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டி.வீரசிங்கவும், சிறந்த பந்துவீச்சாளராக பிரேமலால் ஜயசேகரவும் தெரிவுசெய்யப்பட்டனர். (05)



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மேர்வின் காட்டும் உண்மை

இலங்கையில் இனத்துக்கொரு நியாயமும் நீதியும் என்பதை மேர்வின் சில்வா விடயத்தில் மீண்டும் நிரூபித்திருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

முன்னாள் அமைச்சரும் சர்ச்சைக்குரிய அரசியல்வாதியுமான மேர்வின் சில்வா, வடக்குக் கிழக்குத் தமிழர்களின் தலைகளைக் கொய்வேன் என்று பகிரங்கமாக மிரட்டல் விடுத்துள்ளார். அவர் அப்படிக் கூறி, அதற்கான சாட்சியம் தொலைக்காட்சியில் வெளியாகிய பின்னரும்கூட இன்னும் அவர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதேநேரம் பௌத்த மதத்தை அவமதித்தனர் என்கிற குற்றச்சாட்டில் நகைச்சுவைப் பேச்சாளர் நடாஷா, கிறிஸ்தவப்போதகர்ஜெரோம்பெர்னான்டோ, பிக்கு ஒருவர் என்று பாய்ந்து பாய்ந்து நடவடிக்கை எடுத்த ஆட்சியாளர்கள், மேர்வின் சில்வா விடயத்தில் மட்டும் இன்னமும் அமைதி காக்கின்றார்கள்.


தான் வடக்கு, கிழக்குக்குச் செல்லவுள்ளார் எனவும், அங்கே விகாரைகள் மற்றும் பிக்குகள் மீது கை வைக்க முயன்றால் அங்குள்ளவர்களின் தலைகளுடனேயே களனிக்குத் திரும்பவுள்ளேன் எனவும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்திருந்தார்.

அவரது கருத்து அடங்கிய காணொலியும் ஒளிபரப்பப்பட்டு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதனால்ஆத்திரமடைந்ததமிழ்த்தலைவர்கள்சிலர் மேன்வின் சில்வாவுக்கு தலையில் சுகமில்லை, தமிழரின் வீரம் குறித்து மேர்வினுக்குத் தெரியாது பேலும், மேர்வினுக்கு உளவளச் சிகிச்சை தேவை என்பன போன்ற கருத்துக்களைப் பதிலுக்கு வெளிப்படுத்தியுள்ளனர். இவை பொருத்தமான கருத்துக்களா என்பதற்கும் அப்பால், இந்த எதிர்வினையாற்றலுக்குப் பின்னரும் மேர்வின் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதற்கான அறிகுறிகளும் இல்லை.

முழு இனவாதத்துடன் வெறுப்பூட்டும் பேச்சையும் உமிழ்துள்ளார்மேர்வின்சில்வா. அவரதுகருத்துக்கள் தமிழ் – சிங்கள நல்லுறவைப் பெருமளவில் பாதிக்கின்றபோதும், மேர்வின் நேரடியாகத் தமிழர்களுக்குக் கொலை மிரட்டல் விடுகின்றார். ஆனாலும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அவரும் ஒரு சிங்களவரே என்பதைத் தாண்டி அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லை.

உண்மையில் மேர்வின் போன்றவர்களே இந்த நாட்டிக்குக் கிடைத்த சாபக்கேடு. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராகப் பணியாற்றியவரான நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வருகை தந்தபோது அவரைத் திருமணம் செய்துகொள்ளவும் தயாராக இருக்கின்றார் என்று உளறிக்கொட்டி, பன்னாட்டு அரங்கில் இலங்கையின் மதிப்பை இழக்கச்செய்தவர் மேர்வின். அப்போதும் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை. இப்போது தமிழர்களை மோசமாக நடத்தியபோதும் அவர் மீது எந்த நடவடிக்கையும் இல்லை.

தமிழர்கள் இந்த நாட்டில் இரண்டமாம் தரக் குடிமக்கள் என்கிற வகையில் உணர்வதற்கு ஆட்சியாளர்களின் இதுபோன்ற நடவடிக்கைகளே காரணம். ஒரு கண்ணில் எண்ணெய்யும் ஒரு கண்ணில் சுண்ணாம்புமாக அணுகும் போக்குக் கலையாத வரையில் இந்த நாட்டில் அமைதி என்பது குதிரைக் கொம்பாகவே இருக்கும்.



# அடுத்தடுத்து வரும் சீனக் கப்பல்கள்: இந்தியா கரிசனை

**ந.லோகதயாளன்**



இலங்கை கடற்பகுதிக்குள் சீனாவின் அதி நவீன கப்பல்கள் நுழைவது அதிகரித்துச் செல்வது தொடர்பில் இந்தியாவும் தனது கரிசணையைச் செலுத்தி வருகின்றது.

கடந்த வாரம் இலங்கை கடலிற்குள் புகுந்த சீனாவின் அதிநவீன கண்காணிப்பு வசதிகளுடன் கூடிய போர்க் கப்பல் கொழும்புதுறைமுகத்தில்தரிந்தது ஏன் என இந்தியா ஆராய்கின்றது. இந்தியா அதை வெளிப்படையாகவும் தெரிவித்திருந்தது.

இதேபோன்று சீனாவின் யுவான் வாங்-5, செயற்கைக்கோள் தொழில் நுட்பத்துடன் கண்காணிக்கும் திறன் கொண்ட போர்க் கப்பல் 2022ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இலங்கையை வந்தடைந்தது. இவ்வாறு யுவான் வாங் 5 கடந்த ஓகஸ்ட் மாதம் இலங்கை வந்தடைந்தாலும் யுவான் வாங் 5 வருவதான செய்தி 2022ஆம் ஆண்டு யூலை இறுதிப் பகுதியில் இருந்தே பிரஸ்தாபிக்கப்பட்டு வந்தது. இதனால் பல திசைகளிலும் அது கண்காணிக்கப்பட்டதோடு இலங்கையின் மாத்தறையை அண்டிய கடற்பகுதியில் இருந்து இந்தியாவின் அதி நவீன வசதிகொண்ட கப்பல் யுவான் வாங் 5ஐ கண்காணிப்பதில் ஈடுபட்டதாகவும் அப்போது செய்தி வந்தது.

இந்த நிலையில் சரியாக ஓராண்டுக்குப் பிறகு சீனாவின் இரண்டாவது கப்பல் இலங்கைக்கு வந்திருப்பது இந்தியாவைக் கவலையடையச் செய்துள்ளதா என்றால் அது இல்லை என்றேதெரிகின்றது. ஏனெனில்தற்போது வந்து சென்ற கப்பல் போர்க் கப்பலாக இருப்பினும் அதன் வல்லமை இந்தியாவுக்குத் தெரியும். அதனால் தமக்கான பாதுகாப்பு உறுதியானது என நம்பினர். இருப்பினும் கடந்த ஆண்டு வந்த கப்பல் இந்தப் போர்க் கப்பலைவிட ஆபத்தானது என இந்திய முன் ஆயத்தமாக எச்சரிக்கைகொண்டது.

சீனாவின் சந்தேகத்திற்குரிய விண்வெளி ஆய்வுக் கப்பலில், இந்தியாவின் முக்கியமான இராணுவ நிலைகளை உளவு பார்க்க வாய்ப்பு இருந்ததால், அந்தக் கப்பல் வருவதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்தது. எனினும் அப்போது எதிர்ப்பையும் மீறி இலங்கை அனுமதி வழங்கியதன் பின்னர் இந்த மாதம் மீண்டும் அதி நவீனகண்காணிப்புவசதிகளுடன்கூடிய சீன போர்க் கப்பலான 'ஹாய் யாங் 24 ஹாவ்' இலங்கையின் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்து திரும்பிச் சென்றுள்ளது. இந்த கப்பலின் வருகை குறித்து இந்திய அதிகாரிகளிடம் சீனா தெரிவித்தபோதும், அதன் வருகை குறித்து இந்திய தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது.

எனினும் அந்தக் கப்பலுக்கும் இலங்கை அனுமதி வழங்கியது. அந்தக் கப்பல் கொழும்பு துறைமுகத்தில் இருந்து ஓகஸ்ட் 12ஆம் திகதி புறப்பட்டுச் சென்றது.

இந்தப் போர்க் கப்பல் வருவதற்கும் சீன அதிகாரிகள் இலங்கையிடம் முன்கூட்டியே அனுமதி கோரியிருந்த சமயம் இந்தியத் தரப்பினால் வெளிப்படுத்தப்பட்ட கவலைகள் காரணமாக சீனாவின் போர்க் கப்பலுக்கு அனுமதி வழங்குவதில் இலங்கை தாமதம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.


இந்தச் சூழ்நிலையிலேயே 3வது மிகப்பெரிய கப்பலும் சீனாவில் இருந்து வலுகை தரவுள்ளதான தகவல் இலங்கைத் தரப்பில் இருந்து இந்தியாவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

சியான் 6 எனப்படும் 3,999 தொன் எடை கொண்ட இந்த ஆராச்சிக் கப்பல் ஒக்டோபர் மாதம் இலங்கையின் கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களில் தரித்து நின்று ஆராச்சியில் ஈடுபடவுள்ளதாகவே இந்தியத் தரப்பிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சியான் 6 குவாங்சோவை தளமாக கொண்டு செயற்படும் ராட்சத கப்பல். தற்போது தென் சீனக் கடலில் இருந்து நகர ஆரம்பித்துவிட்டது. இலங்கையை அடையும் இக் கப்பலானது இலங்கையின் தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் அபிவருத்தி முகவரான நாராவின் ஆராச்சியிலும், தென் இந்திய பெருங்கடலையும் ஆய்வு செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இந்தியா இப்பகுதியில் உள்ள தனது கடற்படையின் கண்காணிப்பு கப்பலை உசார் செய்வதோடு மேலும் இரு கப்பல்களை ஒக்டோபர் மாதத்திற்கு முன்னர் இப் பகுதிக்கு கொண்டுவர திட்டமிட்டுள்ளதுரும் மாரி மழை கலத்தில் கடல் கொத்தளிப்பான காலத்திலும் கடலில் பெரும் பதற்றமும் சூழுவதாகவே இருப்பதாகவே கருதப்படுகின்றது ஏனெனில் இலங்கை போன்ற சிறிய நாடொன்றில் ஓராண்டு காலத்திற்குள் ஒரே நாட்டில் இருந்து மிகப்பெரும் 3 வது கப்பல் வருவதானது அயலில் உள்ள இந்தியாவை சினம்கொள்ளச் செய்யும் என்பதில் சந்தேகம் இல்லை. இதன் எதிர்விளைவை இந்தியா எவ்வாறு காண்பிக்கப்போகின்றது என்பதே அடுத்து உள்ள கேள்வியாகவுள்ளது.

**கடந்த வாரம் இலங்கை கடலிற்குள் புகுந்த சீனாவின் அதிநவீன கண் காணிப்பு வசதி களுடன் கூடிய போர்க் கப்பல் கொழும்பு துறைமுகத்தில் தரித்தது ஏன் என இந்தியா ஆராய்கின்றது. இந்தியா அதை வெளிப்படை யாகவும் தெரி வித்திருந்தது.**



காலைக்கதிர் Kalaikkathir



காலைக்கதிர் Kalaikkathir

# பிள்ளைகளுக்கு சின்னமுத்து தடுப்பூசியை ஏற்றிக்கொள்க!

## சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வேண்டுகோள்



நாட்டில் தற்போது சின்னமுத்து நோய் சிறுவர்களிடயே வேகமாக பரவிவருவதால் குழந்தைபிறந்து 09 மாதங்கள் மற்றும் 03 வயதில் போடப்படும் தடுப்பு ஊசி ஏற்றிக்கொள்ளாதவர்கள் உடனடியாக ஏற்றிக்கொள்ளுமாறு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பர் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

திங்கட்கிழமைகளில் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையிலும், செவ்வாய்க்கிழமைகளில் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்துக்குஅருகில்உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலும், புதன்கிழமைகளில் சாய்ந்தமருதுபொலிவேரியன் கிராமத்தில் அமைந்துள்ள சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திலும் குறித்த தடுப்பு ஊசியை ஏற்றிக்கொள்ள முடியும்என்று தெரிவித்துள்ளார். மேலும் சின்னமுத்து நோயிலிருந்து உங்கள் பிள்ளைகளை பாதுகாத்து கொள்ள இந்த தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளுமாறு பொதுமக்களை அவர் வலியுறுத்தியுள்ளார். (05)

# யு.எஸ்.எவ். ஸ்ரீலங்காவின் ஏற்பாட்டில் இளைஞர்களுக்கு ஒருநாள் செயலமர்வு

யுஎஸ்.எவ். ஸ்ரீலங்கா அமைப்பால்சர்வதேசஇளைஞர் தினத்தைமுன்னிட்டுஇளைஞர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் அமைப்பின் ஸ்தாபகதலைவருமானஅ.கபூர் அன்வரின் நெறிப்படுத்தலில் அமைப்பின் தவிசாளர் ஏ.எம். சஹ்றானின் தலைமையில் 'சமூக அபிவிருத்தியில்இளைஞர்களின் வகிபாகம்' எனும் தொனிப் பொருளில்ஒருநாள்செயலமர்வு சாய்ந்தமருது இளைஞர்பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் அணி தேசிய செயற்குழு உறுப்பினரும், அம்பாறை மாவட்ட செயலாளருமான றிஸ்கான் முகம்மட்கலந்துகொண்டதோடு மேலும் அதிதிகளாக தேசிய இளைஞர்சேவைகள்மன்றத்தின் முன்னாள் மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.எம்.ஏ.லத்தீப் மற்றும்சாய்ந்தமருதுஇளைஞர் பயிற்சி நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரி ஏ. ஹமீர் ஆகியோர்கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின்வளவாளராக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பாலியல் நோய் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.என்.எம்.தில்சான் கலந்து, தற்கால இளைஞர்கள் எதிர் கொள்ளும்சவால்கள், அதனை வெற்றி கொள்வது எவ்வாறு என்பது பற்றி இளைஞர் யுவதிகளுக்கு மிகவும் பயனுள்ள வகையில் கருத்துக்களை முன் வைத்தார். (05)




# ஊடகவியலாளர் குருநாதனின் 'நினைவு தொகுப்பு' வெளியீடு









திருகோணமலையின் ஊடகத்துறையின் ஜாம்பவானாகத் திகழ்ந்த அமரர் சின்னையா குருநாதனின் 85 ஆவது அகவை தின நிகழ்வும், அவர் நினைவேடு பற்றி எழுதப்பட்ட 'நானும் குருநாதனும்' தொகுப்பு நூல் வெளியீடும் திருகோணமலை நகராட்சிமன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அன்பின் பாதையின் எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின்ஏற்பாட்டில்அதன் தலைவர் கனக.தீபகாந்தன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த ஒன்றுகூடலும் நினைவுப்பகிர்தலின்போது, அமரர் சின்னையா குருநாதனின் நினைவுகள் பற்றிய பல விடயங்களை இந்நிகழ்வில்கலந்துகொண்ட அனைவராலும் பேசப்பட்டன.

இந்நிகழ்வின்போது, திருமலையின் மூத்த ஊடகவி-யலாளர்கள், எழுத்தாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் 'நானும் குருநாதனும்' என்ற நினைவேட்டு நூலை அமைப்பின் தலைவர் கனக. தீபகாந்தன் வழங்கி வைத்தார். (05)




OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
conditions apply*
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir



# மடு அன்னையின் ஆவணி திருவிழா

## ஜனாதிபதி பங்கேற்பு

நேற்று (செவ்வாய்க் கிழமை)இடம்பெற்றமன்னார் - மருதமடு அன்னையின் ஆவணித் திருவிழா திருப்பலியில் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்ககலந்து கொண்டார். மன்னார் - மருதமடு அன்னையின் ஆவணி மாத திருவிழா திருப்பலி நேற்று காலை 6.15 மணிக்கு ஆரம்பமாகியது. இம்முறை ஆவணி மாத திருவிழா திருப்பலியைப் பரிசுத்த பாப்பரசரின் பிரதிநிதி பேராயர் பிறைன் உடைக்குவே ஆண்டகை தலைமையிலான ஆயர்கள் இணைந்து கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். இந்நிலையிலேயே பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ் விசேட வழிபாடுகளில்கலந்துகொண்டிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திருவிழா திருப்பலி யில் நாட்டின் அனைத்து பகுதிகளையும் சேர்ந்தசுமார்5லட்சத்துக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# குடிதண்ணீருக்காக 35 வருட போராட்டம் கண்ணகி நகர் மக்களின் அவல வாழ்வு

கிளிநொச்சிகண்டவாளை பிரதேசசெயலாளர்பிரிவுக்குட்பட்ட கண்ணகிநகர் பகுதியில் சுமார் 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள்

வசித்துவரும்நிலையில் 35 வருடங்களாக அவர்கள் சுத்தமான குடிநீரை பெற முடியாமல் தவித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பலர் நீண்ட நாள்களாகநோய்த்தாக்கத்தால் பாதிக்கப்பட்டுவருவதாகவும், எனினும் இதற்கான தீர்வு இதுவரை எட்டப்படவில்லை எனவும் மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

அத்துடன், தமக்குத் தேவையான சுத்தமான குடிநீரை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதாகவும் ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் வரும் அரசியல்வாதிகள் தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் வாக்குறுதி அளித்துவிட்டு போய் மறு தேர்தல் வரும்போதுதான் அவர்களை காணக் கூடியதாக உள்ளதாகவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக ஒரு தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)

# தலைமன்னார் – கொழும்புக்கு இடையில் கடுகதி ரயில் சேவை என்கின்றார் ரனில்!

தலைமன்னாருக்கும் கொழும்புக்கும் இடையில் கடுகதி ரயில் சேவை ஒன்றை தொடங்கத்தீர்மானிக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மன்னார்மடுதிருத்தலத்தின்ஆவணிமாத திருவிழாவில்கலந்துகொண்டுவழிபாடுகளில் ஈடுபட்டதன்பின்னர்கருத்துத்தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போதே தலைமன்னாருக்கும் கொழும்புக்கும் இடையில் கடுகதி ரயில் சேவைஒன்றைஆரம்பிப்பதற்குதீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி சேவை ஆரம்பித்து வைக்கப்பட்ட இருப்பதாகத் தெரிவித்தார்.

மேலும்இந்தியமற்றும்இலங்கைக்கான பயணத்தை இலகுவாக்கும் வகையில் குறித்தசேவை அமையும்எனவும்ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)



# கண்ணி வெடிகளை அகற்ற ஜப்பான் ரூ. 17 கோடி உதவி

வடக்கு மாகாணத்தில் கண்ணிவெடிகளைஅகற்றுவதற்காக ஜப்பானிய அரசாங்கம் நிவாரணத் திட்டத்தின் கீழ் 17 கோடி ரூபா உதவித்தொகையை வழங்கியுள்ளது.

நாட்டின் கண்ணிவெடி அகற்றும்திட்டத்துக்கு அதன் தொடர்ச்சியாக ஆதரவளித்து வரும் ஜப்பான், இதுவரை மொத்தஉதவித்தொகையாக 43 மில்லியன் டொலர்களுக்குமேல்வழங்கியுள்ளது.

அந்தப் பணத்தைப் பயன்படுத்திகடந்த2016ஆம் ஆண்டு முதல் கடந்த ஜூலை மாதம் வரை 11 ஆயிரத்து 471 சாதாரண கண்ணிவெடிகளும், 161 இராணுவ டாங்கி எதிர்ப்புகண்ணிவெடிகளும் அகற்றப்பட்டுள்ளன. (05)



# வெளிநாட்டில் இருந்தபடி இங்கு கூலிப் படையை ஏவி தாக்குதல்

## யாழில் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் வன்முறை கும்பல் ஒன்று வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தியுள்ளதுடன், வீட்டில் இருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றையும் தீக்கிரையாக்கியுள்ளது. கல்வியங்காடு பூதவராஜர் ஆலயத்திற்கு அருகில்உள்ளவீடொன்றினுள் நேற்று அதிகாலை 06 பேர் கொண்ட வன்முறை கும்பல் புகுந்துதாக்குதல்நடத்திவிட்டு தப்பி சென்றுள்ளனர்.

வீட்டில் பொருத்தியிருந்த கண்காணிப்பு கமரா பதிவுகளின் அடிப்படையில் தாக்குதலாளிகளை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டில் இருந்து தாக்குதலுக்கு பணம் கொடுத்து,கூலிப்படையைஏவி தாக்குதல்நடத்தப்பட்டதாகவும் பொலிஸார் தெரித்தனர். (05)

# சீனி வரி மோசடிக்கு இதுவரை தீர்வில்லை

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

சீனி வரி மோசடியில் ஏற்பட்டுள்ள நஷ்டத்தை மீட்பதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என நிதி அமைச்சிடம் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் நடைபெற்ற பொது நிதி தொடர்பான குழுக் கூட்டத்தின் போது நிதியமைச்சு நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாக அதிருப்தி வெளியிட்டார்.

சட்டமா அதிபருடன் கலந்துரையாடிய உள்நாட்டு இறைவரி திணைக்களம் இது தொடர்பில் இதுவரை நடவடிக்கை எடுக்காதது ஏன் என கோப் குழு கேள்வி எழுப்பியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் வழக்கு நிலுவையில் உள்ளதால், நீதிமன்ற தீர்ப்பின் பின்னர் நடவடிக்கைகள்தொடரும்என சட்டமாஅதிபர்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது என நிதியமைச்சின் அதிகாரிகள் கூறினர். எவ்வாறாயினும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளவழக்கைசம்பந்தப்பட்ட தரப்பினர் வாபஸ் பெற்றால் நடவடிக்கைஎடுக்க முடியுமா என கோப் குழு விசாரித்தது.

இதன்படி, உடனடியாக தெரிவிக்கப்பட்ட கவலைகள் தொடர்பில் குழுவுக்கு அறிவிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் குழு கோரியுள்ளது.

மேலும் கோதுமை மா வில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ்வெளியிடப்பட்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குமுறைகள் தொடர்பாக முன்னர் எழுப்பப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக நிதியமைச்சு தெரிவிக்கத் தவறியமை குறித்தும்பொதுநிதிக்கானகுழு கவலைகளை எழுப்பியது.

அத்தோடு ஜூலை 18 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1969 ஆம் ஆண்டு இலக்கம் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான ஒழுங்குமுறைகளும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. (05)

# இறால் பண்ணையாளர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் உத்தரவாதம்



புத்தளம்மாவட்டஇறால் பண்ணையாளர்களின் பிரச்சினைகளுக்கு துரித தீர்வுபெற்றுக்கொடுக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அண்மையில் புத்தளம் மாவட்டத்தில் இடம்பெற்ற இறால் பண்ணை உரிமையாளர்களுடனான விசேட கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்தச்சந்திப்பின் போது இறால் பண்ணை உரிமையாளர்கள் தாம் எதிர்கொண்டுவரும்பல்வேறு பிரச்சினைகள் மற்றும் சவால்கள்குறித்துத்தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்துக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் -

இலங்கை தற்போது முகங்கொடுத்து வரும் கடுமையான பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மத்தியில் நாட்டுக்கு டொலர்களைப் பெற்றுத் தரக்கூடிய இறால் வளர்ப்பு துறையை அபிவிருத்தி செய்வதற்கு அனைத்துநடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். அத்துடன் அண்மையில் தான் அதிகாரிகள் சகிதம் புத்தளம் மாவட்டத்திலுள்ள இறால் பண்ணைகளுக்குநேரடியாக விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்ததாகவும் இதன்போது ஒருசில இறால் பண்ணைகளின் செயற்பாடுகள் தமக்கு திருப்தி அளிக்கவில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் களப்பு பிரச்சினையையும் இறால் பண்ணைகளின் பிரச்சினைகளையும் ஒன்றுக்கொன்று குழப்பிக் கொள்ளக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக நாரா, நக்டா, சிலாடா மற்றும் கடற்றொழில் அமைச்சின் நிபுணர்கள் அடங்கிய விசேட குழுவொன்றை அமைப்பதற்கு நவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சின்செயலாளர்திருமதிஇந்து இரத்நாயக்க, நாரா, நக்டா, சிலாடா நிறுவனங்களின் உயரதிகாரிகள், முன்னாள் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த மற்றும் புத்தளம் மாவட்ட இறால் பண்ணை உரிமையாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# மாணவிகளுக்கு விஷம் கலந்த நீரைக் கொடுத்த சக மாணவி

விஷம் கலந்த நீரை பருகிய மாணவர்கள் ஆறு பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று (செவ்வாய்க் கிழமை)நாராம்மலபகுதியிலுள்ளபாடசாலை ஒன்றில் பதிவாகியுள்ளது.

10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களே விஷக்கலவையுடனான நீரை பருகியுள்ளனர். 10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் அதே தரத்தில் கல்வி கற்கும்சக மாணவிகளுடன் குரோதமடைந்தமையால் மாணவிகளின் தண்ணீர் போத்தல்களில் விஷத்தை கலந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சம்பவத்துடன் தொடர்புடைய சிறுமியும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என நாராம்மல பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)



# மேர்வின் சில்வாவை உடன் கைது செய்யவேண்டும்

## அருட்தந்தை மா.சத்திவேல் வலியுறுத்து

நல்லிணக்கத்தைவிரும்புபவராக ஜனாதிபதி இருந்தால் மேர்வின் சில்வாவை கைதுசெய்து விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என அரசியல் கைதிகளை விடுதலைசெய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார். மேர்வின் சில்வாவின் சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பாக கண்டனம்வெளியிட்டுஊடகங்களுக்கு அறிக்கைஒன்றைஅனுப்பிவைத்துள்ள அருட்தந்தை மா.சத்திவேல், அவரது கருத்து பௌத்தத்தின் பெயரால் புத்தனின் போதனைகளை அவமதிக்கும் செயல் என குற்றம் சாட்டியுள்ளார்.

அரசியல் கட்சிகளாலும் மக்களாலும் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ள மேர்வின் சில்வா, நாடு வீழ்ச்சியில் இருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் அடிமட்ட சிங்கள பௌத்த மக்களை தூண்டிவிடும் இழிவான அரசியலை மேற்கொள்வதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். இன்றைய பேரினவாத அரசியலை முன்னெடுக்கும் அரசியல் தலைமைகளுக்கும் இவர்கள் தேவையாக உள்ளதாலேயே இவர்கள் சுதந்திரமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளனர் என்றும் இந்நிலை நீங்காத வரை நாட்டுக்கு அரசியல் எதிர்காலம் இல்லை என்றும் மா.சத்திவேல் தெரிவித்துள்ளார். இதேவேளை, அரசியல் தீர்வு என 13 ஆவதுதிருத்தத்தைவைத்துக்கொண்டு பூச்சாண்டி காட்டும் தற்போதைய ஜனாதிபதியின் நரி தந்திரத்திற்குள் தமிழர்களை வீழ்த்தி விடாது சுய உரிமைக் காக்கும் அரசியலுக்காக தமிழ் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# மதத் தலைவர்களே மக்களை வழிநடத்துதல் வேண்டுமாம்

## வத்திக்கான் பிரதிநிதி கூறுகிறார்

மதத்தலைவர்கள் சரியான கொள்கையை நோக்கி மக்களை வழி நடத்துவதில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என இலங்கைக்கான வத்திக்கான் அப்போஸ்தலிக்க பிரதிநிதி பிறைன் உடைக்குவே ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மடுத்திருத்தலத்தில் இடம்பெற்ற திருப்பலி நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தவிடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

2015 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் திகதி திருத்தந்தை இந்த நாட்டுக்கு விஜயம் செய்திருந்தார்.

அன்றைய நாளில் அவருக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட மடு அன்னை திருச்சொரூபத்தை அவர் இன்று வரை போற்றுகின்றார்.

உடல் ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் வடுக்களை விட்டுச் சென்ற, 26 வருடங்கள் நீடித்த உள்நாட்டு போரின் தாக்கங்களை நாம் மறந்து விட முடியாது.

2வாரங்களுக்குமுன்னர் யாழ்.மறை மாவட்டத்துக்கு நான் மேற்கொண்டிருந்த மீட்புப்பணி விஜயத்தின் போது மக்கள் மீதும், கைவிடப்பட்ட வீடுகள் மீதும், உடைமைகள் மீதும் போரின் தாக்கம் எவ்வாறு இருந்தது என்பதைப் பார்க்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

மீண்டும் ஒரு போர் வேண்டாம். இன, மத, மொழி, சாதி, கருத்து போன்ற வேற்றுமைகளுக்கு அப்பால் அன்பும், அமைதியும் சகிப்புத்தன்மையும் நிலை பெற வேண்டும்.

இது நல்லிணக்கத்துக்கான நேரமாகும். வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான ஜனாதிபதியுடன் சந்திப்பு போன்ற முயற்சிகள் ஊடாக, நாட்டில் நல்லிணக்கத்தை



எட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளை நாம் பாராட்டுகிறோம்.

ஜனாதிபதி நாடாளுமன்றில் ஆற்றிய உரையில் தெளிவாகக் குறிப்பிட்டமை போல அனைவரும் நன்கு அறிந்த குழப்பமான விடயங்களை போதுமான அளவில் தீர்த்து வைக்கும் வகையில் இந்த செயன்முறைகள் அமையும் என நாங்கள் நம்புகிறோம்.

குறைவாக உள்ள சிறு குழுவினர் உங்கள் மீது எதிர் மறையாக செல்வாக்குச் செலுத்தவோ, திசை திருப்பவோ அனுமதிக்க வேண்டாம்.

மதத்தலைவர்கள் சரியான கொள்கையை நோக்கி மக்களை வழி நடத்துவதில் முன்னணி பங்கு வகிக்க வேண்டும்.

எந்த ஒரு மதத்தலைவரும் தமக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள், மதிப்பு, சலுகைகளைப் பயன்படுத்தி ஏனைய மதங்களை இழிவுபடுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(05)



# ரயில் நிலைய உணவகங்களில் எலி ஓடுகின்ற அவல நிலைமை

அநுராதபுரம் ரயில் நிலைய நடைமேடையில் உள்ள உணவகத்தில் உணவு பொதி செய்யப்பட்ட அலுமாரிகளில் எலிகள் சுற்றித் திரிகின்றன எனப் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனைப் பார்த்த பயணிகள் அதனை தமது கைத்தொலைபேசியில் பதிவு செய்து சம்பந்தப்பட்ட துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

அதற்கமைய, ரயில்வே அதிகாரிகள் உணவகத்துக்கு சீல் வைத்ததையடுத்து, உணவகத்தை நடத்தி வந்தவர் சீலை உடைத்து உபகரணங்கள் மற்றும் உணவு பொருள்களை எடுத்துச் சென்றுள்ளார்.

பின்னர் சுகாதார அதிகாரிகள் வந்து உணவகத்துக்கு மீண்டும் சீல் வைத்ததுடன் மறைத்து வைக்கப்பட்ட உணவை எடுத்து வருமாறு சம்பந்தப்பட்ட நபருக்கு உத்தரவிட்டனர்.

இந்த உணவகத்தை நடத்தியவர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில், அனுராதபுரம் ரயில் நிலையம் மட்டுமன்றி கொழும்பு கோட்டை, கண்டி, மஹவ மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய ரயில் நிலையங்களிலும் இதே நபர் உணவகங்களை நடத்தி வருகிறார் எனத் தெரியவந்துள்ளது.

(05)

# இலங்கையின் மனிதக் கடத்தல்கள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## கமல் குணரத்ன எச்சரிக்கை

மனிதக்கடத்தல் தனிமனித உயிர்களை மட்டுமல்ல தேசிய பாதுகாப்பையும் அச்சுறுத்தும் சவாலாக மாறியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்



மனித கடத்தல் இரக்கமற்ற வணிகமாக மாறி வருகிறது, அது பாதிக்கப்படக்கூடியவர்களை இரையாக்கி அவர்களின் அவநம்பிக்கையைப் பயன்படுத்துகிறது.

இந்த அச்சுறுத்தலின் தீவிரத்தை உணர்ந்து, 2021-2025 ஆண்டுகளில் மனித கடத்தலைக் கண்காணிக்கவும் எதிர்த்துப் போராடவும் தேசிய மூலோபாய செயல் திட்டத்தை நாங்கள் உருவாக்கியுள்ளோம்.

தடுத்தல், பாதுகாப்பு, வழக்கு தொடுத்தல் மற்றும் கூட்டாண்மை என எங்கள் அணுகுமுறை நான்கு தூண்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இந்த நடவடிக்கையில் அரசாங்கத்துடன் இணைந்து அரசசாரா நிறுவனங்களும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்.

மேலும் அரசாங்கங்களுக்கு இடையேயான நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவதற்கும், களஅபிவிருத்தி உத்தியோகத்தர்களை பணிக்குழுவுடன் இணைப்பதற்கும் தீர்மானித்துள்ளோம்.

அத்தோடு மனிதகடத்தல் பற்றிய விழிப்புணர்வை கல்வி பாடத்திட்டத்தில் இணைத்துக்கொள்வதே தமது நோக்கம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(05)

# மந்திகை ஆதார வைத்தியசாலையில் தண்ணீர் இன்றித் தவிக்கும் மக்கள்

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் திங்கட்கிழமை முதல் தண்ணீர் வசதியின்றி நோயாளர்கள் மற்றும் வைத்தியசாலை அதிகாரிகள் தவித்துவருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையின் அத்தியட்சகர் கருத்துத் தெரிவிக்கையில் -

எமதுவைத்தியசாலைக்கு நீர் வழங்கும் பிரதான நீர்ப்பம்பி செயலிழந்துள்ளமையால் திங்கள் முதல் தண்ணீர் வசதியின்றித் தவித்து வருவதாகவும், இதனையடுத்து சிறிய ரக தண்ணீர் பம்பி மூலம் பகுதி பகுதியாக நீர் வசதி செய்யப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் புதிய தண்ணீர் பம்பியை கொள்வனவு செய்வதற்கு பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனையின் அனுமதியை பெற்று மீளமைக்க கால தாமதமாகலாம் என்றும் யாராவது 7.5 குதிரை வலு கொண்ட நீர்ப்பம்பி ஒன்றைக் கொடையளித்தால் தண்ணீர் பிரச்சினை உடனடியாக தீர்க்கப்படலாம் என்றும் தெரிவித்தார்.

இதனிடையே குறித்த பகுதியில் ஒரு லீற்றர் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் 130 ரூபாயில் இருந்து 150 ரூபா வரையும் விற்பனைசெய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(05)

# எண்ணெய் சுத்திகரிப்பு திட்டத்துக்கான ஒப்பந்தத்தை இரத்து செய்ய அனுமதி

அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபைக்கும் அம்பாந்தோட்டை எண்ணெய் சுத்திகரிப்பு தனியார் நிறுவனத்துக்கும் இடையே உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவதற்கு கடந்த 2019 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதியன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்டு நாளொன்றுக்கு 4 லட்சத்து 20 ஆயிரம் பீப்பாய்கள் கொள்ளளவு கொண்ட பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

இந்தநிலையில்,இருதரப்பினருக்கும் இடையில் எட்டப்பட்ட ஒப்பந்தத்தின் விதிகளின்படி, திட்ட ஆதரவாளர் செயற்படவில்லை என்ற காரணத்தால் இந்த உடன்படிக்கையை ரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (05)

# பிரெஞ்சுப் பாண் தயாரித்த இளைஞருக்கு கௌரவிப்பு

## யாழ்ப்பாணத்தில் நடந்தது



உலகின் மிகப் பிரபலமான உணவுகளில் ஒன்றாக பிரெஞ்சுப் பாண் உள்ளது. அந்தவகையில் பிரான்ஸில் ஆண்டுதோறும் நடைபெறும் பிரெஞ்சுப்பாண் தயாரிக்கும் போட்டியில் இவ்வாண்டு வெற்றிபெற்ற இலங்கைத் தமிழரான தர்ன் செல்வராஜாவைக் கௌரவிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள, யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் பணிமனையில் இக் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது தர்சனுக்கு மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதில் யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி உரிமையாளர்கள் கலந்துகொண்டனர்.

வவுனியாவை பிறப்பிடமாக கொண்ட தர்ன் பரீஸில் உள்ள பேக்கரி ஒன்றில் பணியாற்றி வரும் நிலையில் 126 போட்டியாளர்கள் பங்குபற்றிய குறித்த போட்டியில் அவர் வெற்றி வாகை சூடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை, பிரான்ஸின் ஜனாதிபதி மாளிகையான எலிசேக்கு ஒருவருடத்திற்கு தேவையானபாணை வழங்கும் வாய்ப்பும் தர்ஷனுக்கு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் தீர்த்தோற்சவம்



*யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய தீர்த்தோற்சவம் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்றது.*

*இதன்போது தந்தையை இழந்தவர்கள் பலர் ஆடி அமாவசை தினமாகிய நேற்று விரதம் இருந்து, தமது தந்தைக்கு வில்லூன்றி தீர்த்த கரையில் பிதிர்கடன்களை நிறைவேற்றி வருகின்றனர்.*

*(05)*

# மட்டக்களப்பில் தங்கசங்கிலி திருடிய 9 பேர் மாட்டினர்

## நால்வர் பெண்கள்

மட்டக்களப்பில் ஆலய மற்றும் தேவாலய திருவிழாக்களில் தங்கச் சங்கிலிகளைத் திருடிய 4 பெண்கள் உட்பட 9 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் மற்றும் மரியால் தேவாலயத்தில் திருவிழாக்கள் இடம்பெற்று வரும் நிலையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) குறித்த திருவிழாக்களுக்கு வருகை தந்தவர்களது தங்க ஆபரணங்கள் திருடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் சுமார் 22 பவுண் பெறுமதியான தங்க ஆபரணங்கள் காணாமற் போயுள்ளன என மட்டு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

(05)



# இந்திய சுதந்திரதினம் யாழ்ப்பாணத்திலும்

இந்தியஅரசானது நேற்றுதனது 77ஆவதுசுதந்திர தினத்தைக் கொண்டாடி வரும் நிலையில் யாழ்ப்பாணம் மருதடி வீதியில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்தில் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.

அந்தவகையில் நேற்று காலை 9 மணியளவில் இந்தியாவின் தேசியக்கொடியை துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் ஏற்றிவைத்தார்.

இந்தியாவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியை துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் வாசித்தார்.

இந்நிகழ்வில் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (05)



# யாழ். கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் விசேட வழிபாடு

ஆடி அமாவாசையான நேற்று நாட்டின் பலபகுதிகளிலும் இந்துக்கள் பிதிர்க்கடனை நிறைவேற்றி வருகின்றனர

அந்தவகையில் இத்தினத்தை முன்னிட்டு யாழ். கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திலும், கீரிமலை கண்டகி தீர்த்த கரையிலும் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# அருள்மிகு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் தேர் உற்சவம்







கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு அருள்மிகு ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் திராவிட முகப்புத்திர சிற்ப தேர் உற்சவம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை பல்லாயிரக்கணக்கான அடியார்கள் புடைசூழ வெகுவிமர்சையாக நடைபெற்றது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றை ஒருங்கே கொண்ட இந்த ஆலயத்தின் மஹோற்சவம் கடந்த 07 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இலங்கையில் மிகவும் உயரமான திராவிட முகப்புத்திர சிற்ப மகாரதம் கொண்ட ஆலயமாகவும் சிறப்புபெற்ற இந்த ஆலயத்தின் தேர் உற்சவம் சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ இரா. ஆதிசௌந்தரராஜ குருக்கள் தலைமையில் நேற்று காலை, விநாயகர் மற்றும் கொடித்தம்பத்திற்கு விசேட பூஜைகள் நடைபெற்று, பஞ்சமுக விநாயகருக்கு வசந்த மண்டபத்தில் விசேட பூஜைகள் நடைபெற்று சுவாமி வீதியுலா சிறப்பாக நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து வெளிவீதி பஞ்சமுக விநாயர், தேரில் ஆரோகணிக்க அங்கு விசேட பூஜைகள் நடைபெற்று ஆயிரக்கணக்கான பெண்கள், ஆண்கள் வடமிழுக்க தேர் உற்சவம் சிறப்பாக நடைபெற்றது.

இந்தத் தேர் உற்சவத்தில் இலங்கையின் பலபாகங்களிலுமிருந்து ஆயிரக்கணக்கான அடியார்கள் கலந்துகொண்டனர். இதன் போது நாட்டியாஞ்சலி நிகழ்வுகளும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இராமபிரானால் வழிபட்ட ஆலயம் என்ற பெருமையினையும் பிதிர்க்கடன் தீர்க்கும் தீர்த்தக்கேணியைக்கொண்ட பெருமையினையும்கொண்டதாக மாமாங்கேஸ்வரர் ஆலயம் இருந்து வருகின்றது.

இத்தகைய சிறப்புமிக்க ஆலயத்தின் ஆடி அமாவாசை தீர்தோற்சவம் இன்று (புதன்கிழமை) நண்பகல் மாமாங்கேஸ்வரர் தீர்த்தக்கேணியில் நடைபெறவுள்ளது.(05)

## 4 நாள் பயணமாக பிரதமர் சீனாவுக்கு

சீனாவுக்கான நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பிரதமர் தினேஷ் குணவர்தன திங்கட்கிழமை இரவு கொழும்பிலிருந்து சீனாவுக்குப் பயணமானார்.

சீன வர்த்தக அமைச்சு மற்றும் யுவான் மாகாண அரசு இணைந்து நடத்தும் 7ஆவது சீன - தெற்காசிய எக்ஸ்போ கண்காட்சி மற்றும் 27வது சீனா குன்மிங் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கண்காட்சி ஆகியவற்றில் அவர் பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார்.

சீனாவின் குன்மிங்கில் ஒகஸ்ட் 16 முதல் 20 வரை இந்த எக்ஸ்போ கண்காட்சி நடைபெறவுள்ளது. குஎக்ஸ்போ ஏற்பாட்டாளர்களின் கருத்துப்படி, இந்த மாபெரும் வர்த்தக கண்காட்சியில் 60 நாடுகள் பங்கேற்கவுள்ளன.

அவை அனைத்து தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளும், பிராந்திய பொருளாதார பங்குடமை யூசிஎீஊண உறுப்பு நாடுகளும் அடங்கும். 'பொது அபிவிருத்திக்கான ஒருமைப்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு' என்ற கருப்பொருளின் கீழ் இந்தக் கண்காட்சி நடத்தப்படுகின்றது. இராஜாங்க அமைச்சர்களான தாரக பாலசூரிய, ஜானக வக்கும்புர மற்றும் கனக ஹேரத் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன மற்றும் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க ஆகியோரும் பிரதமருடன் சீனா சென்றுள்ளனர்.

## பனிச்சங்குளம் அருகே அதிகாலையில் லொறியில் மோதிச் சிதைந்தது வான்

### மூன்று பேர் இறப்பு; 8 பேர் காயம்

ஏ - 9 பிரதான வீதியின் மாங்குளம் - பனிச்சங்குளம் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் 8 பேர் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த வான் ஒன்று, வீதியில் நிறுத்தப்பட்டிருந்த பாரவூர்தி ஒன்றுடன் மோதுண்டதுடன், குறித்த பாரவூர்தி அதன் முன்னால் இருந்த மற்றுமொரு பாரவூர்தியுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, பாரவூர்திக்குப் பின்னால் நின்றிருந்த ஒருவரும் வானில் பயணித்த இருவரும் படுகாயமடைந்த நிலையில், மாங்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், குறித்த மூவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். அதேவேளை, வான் மற்றும் பாரவூர்திகளில் பயணித்த 3 பெண்கள் உள்ளிட்ட 8 பேர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மற்றும் மாங்குளம் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

விபத்தில் யாழ்ப்பாணம், வெல்லம்பிட்டி மற்றும் முல்லேரியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 58, 46 மற்றும் 38 வயதுடையவர்களே உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று விசாரணைகளை மேற்கொண்டு வரும் மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## மடுத் திருவிழாவில் ஜனாதிபதி

### இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்பு

மன்னார் மருதமடு அன்னையின் ஆவணித் திருவிழா திருப்பலியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார்.


மன்னார் - மருதமடு அன்னையின் ஆவணி மாத திருவிழா திருப்பலி நேற்றுக் காலை 6.15 மணிக்கு ஆரம்பமாகியது.

இம்முறை ஆவணி மாத திருவிழா திருப்பலியைப் பரிசுத்த பாப்பரசரின் பிரதிநிதி பேராயர் பிறைன் உடைக்குவே ஆண்டகை தலைமையிலான ஆயர்கள் இணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர்.

இந்நிலையிலேயே பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விசேட வழிபாடுகளில் கலந்துகொண்டார்.

இத்திருவிழா திருப்பலியில் நாட்டின் அனைத்து பகுதிகளையும் சேர்ந்த சுமார் 5 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் கலந்துகொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நல்லூர் பெருந்திருவிழாவிற்கான ஏற்பாட்டுப் பணிகள் மும்முரம்





வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்திர மகோற்சவ திருவிழா ஒகஸ்ட் 21 காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் தொடங்கி 25 நாட்களுக்கு மகோற்சவ திருவிழாக்கள் இடம்பெறவுள்ளதையொட்டி ஏற்பாடுகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆலயசூழலில் பக்தர்கள் இளைபாறுவதற்கான கொட்டகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. தாக சாந்தி நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

ஆலய வீதியை சுற்றி சிவப்பு வெள்ளை கொடிகள் ஆலயத்தினரால் கட்டப்பட்டு வருகின்றன. கொடிகள் கட்டப்பட்டு எல்லைப்படுத்தப்படும் ஆலய சூழலில் வியாபார நடவடிக்கைகள், யாசகம் பெறல், விளம்பர நடவடிக்கைகள் என்பவை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது., ஆலயத்திற்கு வருவோர் அப்பிரதேசத்திற்குள் காலணிகளுடன் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## தென்னிலங்கை விபத்தில் வயோதிபதித் தம்பதி சாவு

காலி, பெந்தோட்டைப் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் வயோதிபதித் தம்பதியினர் உயிரிழந்தனர்.

அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் முன்னால் சென்ற பாரவூதியுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் பலப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே உயிரிழந்துள்ளனர்.

69 வயதுடைய கணவன் சம்பவ இடத்திலும், படுகாயமடைந்த 65 வயதுடைய மனைவி பெந்தோட்டை வைத்தியசாலையிலும் சாவடைந்துள்ளனர் என்று விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இலங்கையில் வைத்தியசாலை திறக்க இந்திய வைத்தியர்களுக்கு ஒத்துழைப்பு

### இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் ஆந்திராவில் தெரிவிப்பு



இந்திய வைத்தியர்கள் இலங்கையில் வைத்தியசாலைகளை ஆரம்பிப்பதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாக தயார் என்று வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் உறுதியளித்துள்ளார்.

ஆந்திராவின் விஜயவாடாவில் உள்ள வைத்திய நிறுவனமொன்றில் நேற்றையதினம் மருத்துவ திட்டமொன்றை ஆரம்பித்து வைத்ததன் பின்னர் ஊடகங்களிடத்தில் கருத்து வெளியிடும்போதே அவர் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆந்திர மாநிலத்தில் கிடைக்கும் சிறப்பான மருத்துவ வசதிகளைப் போன்று இலங்கையிலும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுக்கப்படுகின்றது.

அதற்காக கொழும்பு தவிர்ந்த ஏனைய நகரங்களிலும் வைத்தியசாலைகளை உருவாக்குவதற்கான அனுமதி வழங்கப்படவுள்ளது. அதற்கான நிலத்தை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன. இந்திய வைத்தியர்கள் இலங்கையில் வைத்தியசாலைகளை நிறுவுவதன் மூலம் இலங்கைபிரஜைகளும் பயன் பெற வேண்டும் - என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.08.2023இல் வெளியிடப்பெற்றது.